# நடுகல்லின் தோற்றமும் வளர்ச்சியும்

**சூ.நளினி**
**முனைவர் பட்ட ஆய்வாளர் (முழுநேரம்),**
**தமிழ்த்துறை, மொழிகள் புலம்,**
**வேல்ஸ் அறிவியல் தொழில் நுட்ப உயர் ஆராய்ச்சி நிறுவனம்,**
**பல்லாவரம், சென்னை - 117.** Karthinalini4@gmail.com

11

**ஆய்வுச் சுருக்கம்**

வீரமரணம் அடையும் வீரனின் நினைவாக “நடுகல்” அமைத்து வழிபடுவர். பெருங்கற்காலத் தொடக்கம் முதலே “நீத்தார் நினைவுக்கற்கள்” அமைத்து வழிபட்டு வந்திருக்கின்றனர். கல்திட்டை, கைபதுக்கை, கல்வட்டம், கல்லரண் போன்ற வடிவில் “சவச் சின்னங்கள்” ஏற்படுத்தப்பட்டுள்ளன. தொல்காப்பியர் கல்லைக் கண்டறிதல், கல்லை எடுத்தல், நீர்ப்படை செய்தல், கல்லை நடுதல், பெரும்படை செய்தல், வாழ்த்துதல் என ஆறுநிலைகளில் கூறுகிறார். கற்புடைத் தெய்வமாகிய கண்ணகிக்கு சேர மன்னனாகிய செங்குட்டுவன் இமயமலையிலிருந்து எடுக்கப்பட்டக் கல்லினைக் கொணர்ந்து பத்தினிக் கோட்டம் அமைத்து வழிபடல்.

**திறவுச்சொல்**

நடுகல்லின் தொடக்கம் - பெருங்கற்கால நடுகற்கள் - சங்ககால நடுகற்கள் - தொல்காப்பியத்தில் விளக்கம் - சிலப்பதிகாரம் - பத்தினிக்கோட்டம்.

**நடுகல்லின் தோற்றமும் வளர்ச்சியும்**

## முன்னுரை

தமிழரின் சிறப்பையும் பண்பாட்டுக்கூறுளையும் மக்களுக்குத் தெரியப்படுத்துபவை சங்க இலக்கியங்களும் அவற்றோடு தொடர்புடைய நினைவுச்சின்னகளும் ஆகும். தமிழரின் வீரத்தையும், வரலாற்றுப் பதிவுகளையும் காட்டும் சான்றுகளுள் முதன்மை பெற்றவை நடுகற்கள். போரில் வீரமரணம் அடையும் வீரனின் நினைவாக “நடுகல்” அமைத்து வழிபடுவது தமிழரின் மரபாக இருந்துள்ளது. அத்தகைய நடுகல் வழிபாட்டு முறைகள் பற்றியும் அதன் தோற்றம் வளர்ச்சி பற்றியும் இக்கட்டுரையில் காண்போம்.

## பெருங்கற்கால நடுகற்கள்

தமிழகம் மட்டுமின்றி உலகெல்லாம் வீரவழிபாடு நடைபெற்றுள்ளது. பெருங்கற்காலத் தொடக்கம் முதலே “நீத்தார் நினைவுக்கற்கள்” அமைத்து வழிபட்டு வந்திருக்கின்றனர். பெருங்கற்கால வாழ்க்கை சங்க காலத்திலும் தொடர்வதால், சங்க இலக்கியங்களிலும் “சவ அடக்கமுறைகளைப்” புலவர்கள் கூறியுள்ளனர். பெருங்கற்காலக் குழிகளில் யவணர் ஓடுகள், காசுகள், உலோகக்காசுகள் கிடைத்துள்ளன. சங்க காலத்தைச் சார்ந்த எழுத்துள்ள காசுகளும், முத்திரைகளும், பானை ஓடுகளும், குகைக் கல்வெட்டுகளும் கிடைத்துள்ளன. ஆனால் எழுத்துள்ள நடுகல் கிடைக்கவில்லை.

**சங்ககால நடுகற்கள்**

சங்க காலத்தில் நடுகல் வழிபாடு குறித்து பல்வேறு புலவர்கள் பாடல்களை எழுதியுள்ளனர். சங்க இலக்கியங்களில் இடம்பெறும் நினைவுக் கற்கள் (அ) நடுகற்களின் வளரச்சியினை நான்கு கட்டங்களாகப் பிரித்து ஆய்வு செய்யலாம் எனக் கூறுகிறார் ச.கிருஷ்ணமூர்த்தி. (நடுகற்கள்). கி.மு.8ஆம் நூற்றாண்டு தொடங்கி கி.மு.3ஆம் நூற்றாண்டுவரை முதல் கட்டம். பெருங்கற்காலக் கற்குடுவை, கல்திட்டை, கல்பதுக்கை எனும் நினைவுச் சின்னங்கள் இறந்துபட்ட மறவர் (அ) கானவர்களுக்கு எடுக்கப்பட்டவை என்பர். அகநானூற்றில் கல்பதுக்கை தொடர்பான செய்தி இடம் பெற்றுள்ளது.

"விழைவெளில் ஆடும் கழைவளர் நனந்தலை
வென்றுனை அம்பின் விசைஇட வீழ்ந்தோர்
எண்ணுவரம்பு அறியா உவல்இடு பதுக்கை" (அகம்.10 9, 6-8)

தலைவியைப் பிரிந்து வினைமேற் சென்றான் தலைவன். அப்பொழுது தலைவியின் நினைவு வருகின்றது. அவள் ஊரைத்தன் மனக்கண்முன் கொண்டு வருகிறான். வெள்ளிய முனைகளையுடைய அம்பினை வேகமாகச் செலுத்தி வீழ்ந்தோர் கணக்கற்றவராயினர். எண்ணினாலும் வரம்பினை அறியாதபடி தழையிட்டு மூடிய பதுக்கைகளும் எழுந்தன எனுமிடத்தில் பதுக்கை பற்றிய செய்தி இடம்பெற்றுள்ளது. கி.மு.3ஆம் நூற்றாண்டு முதல் கி.மு.முதலாம் நூற்றாண்டுவரையிலான காலம் என்பர். பெருங்கற்கால நினைவுச் சின்னங்களான கல்திட்டை, கைபதுக்கை, கல்வட்டம், கல்லரண் போன்ற வடிவில் "சவச் சின்னங்கள்" ஏற்படுத்தப்பட்டன.

**சங்க இலக்கியத்தில் நடுகல்**

சங்க நூல்களில் முப்பதிற்கும் மேற்பட்ட நடுகல் பற்றிய பாடல்கள் இடம்பெற்றுள்ளன. அவற்றுள் இருபது பாடல்களே மூன்றாம்கட்டத்தைச் சார்ந்தவை. ஓவியம், உருவங்களுடன் கூடிய நடுகற்கள், கல்திட்டை, கல்பதுக்கை, குகை ஓவியங்கள் ஆகியவை இக்காலகட்டத்தில் பெருகின என்பர். நடுகல்லாய் மாறிய வீர்களுக்குச் சடங்குகள் ஏற்படுத்தப்பட்டதை,

"முனைஆத் தந்து முரம்பின் வீழ்ந்த
வில்ஏர் வாழ்க்கை விழுத்தொடை மறவா
வல்ஆண் பதுக்கைக் கடவுட் பேண்மார்
நடுகல் பீலி சூட்டித் துடிப்படுத்துத்
தோப்பிக் கள்ளோடு துரூஉப்பலி கொடுக்கும்
போக்குஅருங் கவலைய புலவுநாறு அருஞ்சுரம் (அகம்.35,)

வெட்சி வீரராகிய மறவர்கள் போர்முனையிலேயே வென்று பசுக்களை மீட்டனர். அவ்வெட்சியாரைக் கரந்தை வீரர்கள் மேட்டு நிலத்திலே வீழ்த்தித் தம் வெற்றியைக் கொண்டாடினர். போர்க் களத்தில் இறந்த வீரர்களுக்கு நடுகல் நட்டு, அந்நடுகல்லுக்கு மயிலின் தோகைகளைச் சூட்டினர். துடியினை முழங்கினர். நெல்வால் ஆகிய கள்ளோடு செம்மறியாட்டுக் குட்டியையும் பலி கொடுத்தனர் என்பது புலனாகிறது.

**நடுகல்லின் வகைகள்**

நடுகல்லின் அமைப்பு, நடுகல்லில் இடம்பெற்றுள்ள செய்தி ஆகியவற்றினை அடிப்படையாகக் கொண்டு, போரில் வீரமரணம் அடைந்தவர் மட்டுமின்றி வேறுபல காரணத்திற்காக இறந்தவர்களுக்கும் நினைவுக் கற்கள் ஏற்படுத்தி வழிபட்டு வந்துள்ளனர். அவை,

1.வடக்கிருத்தல்கல்,

2.பத்தினிப் படிமக்கல் (அ) சதிக்கல்,

3.ஊர்க்காத்தான்கல்,

4.பெண்காத்தான்கல் (அ) சிறைமீட்டான்கல்,

5.நிசதீகை (அ) துறவியர்கல்,

6.புளிக்குத்திப்பட்டான்கல்,

7.நாய்க்கு நடுகல்,

8.கோழிக்கல்,

9.ஆனைமேல் துஞ்சினார்கல்,

10.கிளிக்கு எடுத்தக்கல் ....... என 23 வகையாக நடுகற்களைப் பிரிக்கின்றார் ச.கிருஷ்ணமூர்த்தி.

**தொல்காப்பியத்தில் நடுகல்**

பெருங்கற்காலந் தொடங்கி இறந்தவர்களுக்கு நினைவுக்கற்கள் எடுக்கப்பட்டாலும், போரில் இறந்தவர்களுக்கு நடுகல் எடுக்கப்பட்டது சிறப்பாகக் கருதப்பட்டு வந்துள்ளது. நடுகல் பற்றியும் தொல்காப்பியம் எடுத்துரைத்துள்ளது. கல்லைக் கண்டறிதல், கல்லை எடுத்தல், நீர்ப்படை செய்தல், கல்லை நடுதல், பெரும்படை செய்தல், வாழ்த்துதல் என ஆறுநிலைகளில் கூறுகிறார். இதனை,

“காட்சி கால்கோள் நீர்ப்படை நடுதல்
சீர்த்தகு மரபில் கல்லொடு புணரச்
சொல்லப்பட்ட எழுமூன்று துறைத்தே” (தொல். புறம்-63)

என்ற நூற்பா வரிகள்மூலம் விளக்குகின்றார். இதில் காட்சி, கால்கோள், நீர்ப்படை என்ற மூன்றும் கல் நடுவதற்குமுன் நிகழ்வதாகும்.

**காட்சி**

கரந்தைப் போரில் உயிர்துறந்த வீரரை நடுகல்லில் நிறுத்தி வழிபாடு செய்வதற்குரிய கல்லைத் தேர்ந்தெடுத்தல்.

**கால்கோள்**

நடுகல்லுக்காகத் தேர்ந்தெடுக்கப்பட்ட கல்லைக் கைக்கோடல்.

**நீர்ப்படை**

தேர்ந்தெடுக்கப்பட்ட கல்லை நீரிலிட்டுக் கழுவித் தூய்மைப்படுத்துதல்.

**நடுதல்**

அக்கல்லினை நடுவதற்காகத் தேர்ந்தெடுத்த ஓரிடத்தில் நல்ல நாளில் நடுதல்.

**பெரும்படை**

கல்லிற்குத்தக்க மரபினையுடைய கோயில் அமைத்தல்.

**வாழ்த்துதல்**

நடுகல்லைத் தெய்வமாகப் போற்றி வழிபாடு செய்தல்.

என்றவாறு தொல்காப்பியரின் நடுகல் தொடர்பான செய்திகளுக்கு உரையாசிரியர்கள் விளக்கம் தருகின்றனர்.

**சிலப்பதிகாரத்தில் நடுகல் வழிபாடு**

உலகில் வாழ்வாங்கு வாழ்ந்து உயிர்துறந்த சான்றோர்களுக்கு நடுகல் எடுப்பதுபோலவே கற்புக்கடம் பூண்டு உயிர்துறந்த பத்தினிப் பெண்ணாகிய மகளிருக்கு நடுகல் நிறுவி வழிபடும் மரபு பண்டைக்காலத்தில் இருந்துள்ளது. கற்புடைத் தெய்வமாகிய கண்ணகிக்கு சேர மன்னனாகிய செங்குட்டுவன் இமயமலையிலிருந்து எடுக்கப்பட்டக் கல்லினைக் கங்கையாற்றில் நீராட்டி, அக்கல்லில் சிலை செய்து, பத்தினிக் கோட்டம் அமைத்து வழிபாடு செய்தான். இச்செய்தியைச் சிலப்பதிகாரத்தின், நடுகற்காதையில் இளங்கோவடிகள் எடுத்துக் காட்டியுள்ளதை

“குன்றக் குரவையும் என்றினை அனைத்துடன்
காட்சி கால்கோள் நீர்ப்படை நடுதல்...” (சிலம்பு.பத் 83-84)

எனும் வரிகள்மூலம் உணரலாம்.

**நடுகல்லைக் கண்டறிதல்**

கண்ணகியைப் போற்றி வழிபடும் விதமாக அழியாமல் நிற்கும் முறைமையினை உடைய பொதியமலையில் அல்லாமலும், விற்பொதியைத் தன்னிடத்தே கொண்ட, அகன்ற பெரிய இமயமலையில் கல்லையெடுத்து, இமயக்கல்லாயினும் கங்கைப் பேரியாற்று நீரினும், பொதியக் கல்லாயினும் காவிரிப் பேரியாற்று நீரினும் மங்கலநீர் முழுக்குத் தகுதியுடையதாகும். இதனை,

“ஒற்கா மரபிற் பொதியி லன்றியும்
விற்றலைக் கொண்ட வியன்பே ரிமயத்துக்
கற்கால் கொள்ளினும் கடலொடும்...” (சிலம்பு.25, 117-123)

என்ற வரிகள் சிறப்பிக்கின்றன.

**கல்லை எடுத்தல்**

கல்லைத் தேர்ந்தெடுத்தபின் தன்னிடத்திற்குக் கொண்டுவருதல் கல்லெடுத்தலாகும். இதனைத் தொல்காப்பியரும், இளங்கோவடிகளும் “கால்கோள்” எனக் கூறுகின்றனர். ஆனால் புறப்பொருள் வெண்பாமாலை “கற்கோள் நிலை” என்கிறது.

**நீர்ப்படை**

அமைச்சர் படைபரிவாரங்களுடன் கங்கைக் கரையை அடைந்து, கனகர், விசயர் தலையில் சுமந்துவந்த கல்லை, கங்கையில் ஒரு புனிதமான இடத்தில் கற்றறிந்த சான்றோர் கூறிய விதிமுறைப் படியும் நீராட்டித் தூய்மை செய்ததை,

“செங்குட்டுவன் தன்சினவேல் தானையோடு

கங்கைப் பேரியாற்றுக் கரையகம் புகுந்து
பாற்படு மரபில் பத்தினிக் கடவுளை
நூற்றிறன் மாக்களின் நீர்ப்படை செய்து…" (சிலம்பு.27, 13-16)
என்ற வரிகள் சிறப்பிக்கின்றன.

**நடுகல் நடுதல்**

அந்தணர்களும், சோதிடர்களும், தேவரும், சிற்ப நூலுணர்ந்தவர்களும் பத்தினிக் கோட்டத்திற்குச் சென்றனர். பின்னர் அச்சிலைக்கு அணிகலன்களை அணிவித்து அருச்சனை செய்து பத்தினிக் கடவுளின் சிலையினை அதற்குரிய நடுகவென்று செங்குட்டுவன் ஆணையிட்டான் என்பதை,

"அறங்களத்து அந்தணர் ஆசான் ……
------- ------- ------ ------
வடதிசை வணக்கிய மன்னவர் ஏற்றன்.." (சிலம்பு.28, 22)

எனும் வரிகள் விளக்குகின்றன. இச்செய்தியைப் புறப்பொருள் வெண்பாமாலை "கற்கொண்டு புகுதல்" எனக் குறிப்பிடுகின்றது.

**பெரும்படை**

நடப்பட்ட கல்லிற்குப் பெரும்பொருட்களைப் படைத்தல் பெரும்படையாகும்.

இலக்கண நூலார் கூறியுள்ள அனைத்து விதிமுறைகளின் பின்பற்றலாகவே இளங்கோவடிகள் கண்ணகிக்கு சிலைவடித்து பத்தினிக் கோட்டம் அமைத்துள்ளதைத் தெளிவாகப் புரிந்துகொள்ள முடிகிறது. சங்க காலத்தின் சமகாலமாகக் கருதப்படும் சிலப்பதிகாரத்திலும் நடுகல் வழிபாட்டு முறை இருந்துள்ளதை அறியமுடிகிறது. ஆண்களுக்கு நடுகல் அமைத்த காலத்திலேயே தன் கற்புத் திறத்தால் அழியாப் புகழ் பெற்ற பெண்ணான கண்ணகிக்கும் கல் அமைத்து வழிபாடு நடத்த எண்ணிய இளங்கோவடிகளை அக்காலப் புரட்சியாளராகக் கருதலாம்.

**முடிவுரை**

மனித வரலாற்றில் கற்காலம் தொடங்கி தற்காலம் வரை அழியாப் புகழ்பெற்ற சான்றயாக நடுகற்கள் விளங்குகின்றன. பெருங்கற்காலம் தொடங்கி கட்டடக் கலை வளர்ச்சியுற்ற காலம் வரை கற்களில் வரலாற்றைப் பதிந்து வைத்துள்ளனர். சங்க இலக்கியங்கள், தொல்காப்பியம், சிலப்பதிகாரம் என்று பழமையான இலக்கிய இலக்கண நூல்களிலும் நடுகல் பற்றிய தகவல்கள் பொதிந்து கிடக்கின்றன. அதிலும் போரில் வீரமரணம் அடைந்த மறவனின் பெருமையைச் சொல்லும் விதத்தில் கல்திட்டை, கல்பதுக்கை, ஓவியம், உருவங்களுடன் கூடிய நடுகற்கள் என வளர்ச்சியடைந்து, பல்லவர்கள் காலத்தில் வட்டெழுத்திலும் கல்வெட்டுகளையும், படைப்புச் சிற்பங்களையும் கொண்டு நடுகற்கள் எழுப்பப்பட்டுள்ளன.

**துணைநூற் பட்டியல்**

1.தொல்காப்பியம்-பொருளதிகாரம் – இளம்பூரணர் உரை,
சாரதா பதிப்பகம், சென்னை 14.

2.சிலப்பதிகாரம் – ஞா.மாணிக்கவாசகன்

உமா பதிப்பகம், சென்னை 0 1.

3.சிலப்பதிகாரம் பகுதி 2 – புலவர்.பொ.வே.சோமசுந்தரனார்

சைவ சித்தாந்த நூற் பதிப்புக் கழகம், சென்னை

4.நடுகற்கள் - ச.கிருஷ்ணமூர்த்தி

மெய்யப்பன் பதிப்பகம், சென்னை

5.புறப்பொருள் வெண்பாமாலை – ச.ஞானசம்பந்தம்

கதிர் பதிப்பகம், திருவையாறு, 20 4.

6.அகநானூறு (களிற்றுயானை நிரை) – புலியூர்க் கேசிகன்

ராம் பிரசுரம், சென்னை 0 1.

7.புறநானூறு - ஞா.மாணிக்கவாசகன்

உமா பதிப்பகம், சென்னை 0 1.